MAY 2025 **U/ID 30624/UCL6A**

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்திற்கு 30 சொற்களில் விடையெழுதுக.

1. மூன்று சங்கங்கள் எவையெவை?

2. பத்துப்பாட்டிலுள்ள ஆற்றுப்படை இலக்கியங்கள் எத்தனை?

3. நற்றிணைக்கு உரை கண்டவர் யார்?

4. குறுந்தொகையின் மொத்தம் எத்தனைப் பாடல்கள் உள்ளன?

5. ஏறுதழுவுதலை எந்த இலக்கியம் நமக்கு அறிமுகம் செய்கின்றது?

6. மருதக்கலியைப் பாடிய புலவர் யார்?

7. புறநானூற்றுப் பாக்கள் எந்த வகைப் பாவினைச் சார்ந்தது?

8. பெருந்திணை என்றால் என்ன?

9. திருவேரகம் என்ற ஊரின் தற்போதைய பெயர் என்ன?

10. முல்லைப் பாட்டிலுள்ள மொத்த அடிகளின் எண்ணிக்கை?

11. குற்றால மலையில் போர் செய்து வெற்றி பெற்றவன் யார்?

12. சங்குகளை அரத்தால் அறுத்துச் செய்த பொருள் என்ன?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்திற்கு முறையே 200 சொற்களில் விடையெழுதுக.

13. தமிழ் மொழியின் சிறப்பினை அறிஞர்களின் கூற்றுக்களின் வழித் தெளிவுறுத்துக.

14. "புணரின் புணராது...." எனத் தொடங்கும் பாடலில் தலைவன் தன் நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழங்கிய பாலைத் திணைப் பாடலின் கருத்துக்களை விளக்குக.

15. குறுந்தொகைப் பாடல்களின் இடம்பெறுகின்ற உவமைகள் இரண்டினைச் சான்றுகளுடன் சுட்டுக.

16. ஏறுகளின் வீரச் செயல்களைக் கலித்தொகை வழி எடுத்துரைக்க.

17. "போற்றுமின் மறவீர்...." எனத் தொடங்கும் பாடலில் அதியமான் நெடுமான் அஞ்சியை ஔவை எங்ஙனம் பாடுகிறார் ?

18. பகைவர் தேசம் பாழ்பட்ட நிலை எங்ஙனம் ? மதுரைக்காஞ்சி வழி எடுத்துரைக்க.

19. மதுரைக்காஞ்சி காட்டும் முல்லை நிலக் காட்சிகளைக் காட்சிப்படுத்துக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றிற்கு முறையே 500 சொற்களில் விடையெழுதுக.

20. நற்றிணையின் நெய்தல் திணைப் பாடலின் கருத்துக்களைச் சுருக்கி உரைக்க.

21. தலைவிக் கூற்றுப் பாடல்களின் கருத்துக்களைக் குறுந்தொகை வழியாக விளக்குக.

22. ஏறு தழுவும் வீரக்காட்சிகளை விளக்கிக் கட்டுரை எழுதுக.

23. வேள் பாரியைக் கபிலர் பாடிய புறநானூற்றுப் பாடலின் கருத்துக்களை விவரி.

24. முருகனின் ஆறு முகங்கள் மற்றும் பன்னிரு கரங்களின் செயல்களாகத் திருமுருகாற்றுப்படை கூறுவனவற்றை எடுத்துரைக்க.

———————